மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை: திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13 ஆம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.09/2024
அ.வ.எண்.301/2015

J.சரவணகுமார் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. N.ஜெகநாதன்
2. சண்முகசுந்தரம்
3. சுரேஷ்
4. சாந்தப்பன்
5. நல்லபிரபு
6. ராஜா
7. நரசம்மாள் (இறந்துவிட்டார்)
8. சகுந்தலா
9. மகேஸ்வரி
10. செல்வமணி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

11. கார்த்திகேயன்
12. மணிகண்டன்
13. நீலாம்பிகை
14. மேகாஸ்ரீ
15. செந்தமிழ்செல்வன் ... எதிர்மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்கள்

இம்மனு கடந்த 09.01.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.கோபிநாத் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.சரவணன் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 6ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.மோகன்ராம் அவர்கள் ஆஜராகியும், 7ம் எதிர்மனுதாரர் இறந்தவராகவும், 8 முதல் 15 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாக்கப்பட்டும், இருந்து வந்த நிலையில், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும் ஆகியவற்றை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு காலவரையறைச்சட்டம் பிரிவு 5ன் கீழ் கடந்த 19.12.2022ம் தேதியன்று இறந்துபோன 7ம் எதிர்மனுதாரரின் சட்டப்பூர்வமான வாரிசுகளை இவ்வழக்கில் 11

முதல் 15 பிரதிவாதிகளாக உரிய நேரத்தில் சேர்க்காததால் ஏற்பட்ட 409 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

1) மனுவின் சுருக்கம் : –

மனுதாரர்/வாதியால், 1 முதல் 10 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பாகப்பிரிவினை, தனி சுவாதீனம் மற்றும் விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி 1 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்து, வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், கடந்த 19.12.2022ம் தேதியில் 7ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி இறந்துவிட்டார். அவரது மூன்று மகன்களில் ஒரு மகன் ஏற்கனவே இறந்துவிட்டார் மேலும் மற்றொரு மகனான சங்கர் அவரது மனைவி மற்றும் மகளை வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டார். அவர்களது வாரிசுகளை சேர்க்க மனுதாக்கல் செய்ய காலதாமதமாகிவிட்டது. ஆகவே இறந்துபோன 7ம் எதிர்மனுதாரரின் சட்டப்பூர்வமான வாரிசுகளை இவ்வழக்கில் 11 முதல் 15 பிரதிவாதிகளாக உரிய நேரத்தில் சேர்க்காததால், வழக்கு அற்றுப்போனதை ரத்து செய்ய மனுதாக்கல் செய்வதில் ஏற்பட்ட 409 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2) 1ம் எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. தாவா நிலுவையில் இருக்கும்போது 7ம் பிரதிவாதி 19.12.2022ம் தேதி இறந்துவிட்டதாக கூறுவது உண்மை. அவர்களுக்கு 3 மகன்கள் என்பதையும், அதில் ஒரு மகன் மேற்படி 7ம் பிரதிவாதி இறப்பதற்கு முன்பே இறந்துவிட்டதாக கூறுவதை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். மேலும் இறப்புசான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மேற்படி 3 மகன்களில் சங்கரன் என்ற மகன் 7ம் பிரதிவாதி இறந்ததற்கு பின்பு இறந்தார். மேற்படி சங்கரனின் பிள்ளைகள் மைனர்கள் ஆவர். மேற்படி 7ம் பிரதிவாதியின் வாரிசுகள் விபரம் தெரியவில்லை என கூறுவது பொய்யாகும்.

(ii) ஏனெனில் மேற்படி வழக்கில் வாதி, மேற்படி வழக்குரையில் 7ம் பிரதிவாதியை தனது தன்தையுடன் பிறந்த அத்தை என்றும், அதனால் காலதாமதம் என்றும் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் பொய்யாகும். அதனால் மேற்படி 7ம் பிரதிவாதி இறந்த அன்றே மனுதாரருக்கு நன்கு தெரியும். மேற்படி 14ம் எதிர்மனுதாரர் மைனர் என்பதை மறைத்து தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. மேற்படி மனுவில் எந்தவிதமான உண்மையும் இல்லை. எனவே இம்மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1ம் எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3) 4ம் எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்டு, 2, 3, 5 மற்றும் 6ம் எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

மனு பொய்யானது. சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. கடந்த 19.12.2022ம் தேதியில் 7ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி இறந்ததாக கூறுவது உண்மை. ஆனால் மேற்படி 7ம் எதிர்மனுதாரர் மூன்று ஆண்வாரிசுகளை விட்டுவிட்டு இறந்ததாக கூறுவது பொய்யானதாகும். மேலும் மேற்படி மூன்று வாரிசுகளில் சங்கர் என்பவர் 7ம் எதிர்மனுதாரருக்கு முன்பே தனது மனைவி மற்றும் குழந்தைகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டதாக கூறுவது பொய்யானதாகும். உண்மையில் இறந்த 7ம் எதிர்மனுதாரருக்கு சங்கரன், கார்த்திகேயன், மணிகண்டன் ஆகியோர்கள் வாரிசுகள் ஆவர். அவர்களில் மேற்படி சங்கரன் என்பவர் தனது மனைவி நீலாம்பிகை, மகன் செந்தமிழ்செல்வன், இளவர் மகள் மகஷிரி ஆகியோரை விட்டுவிட்டு இறந்துள்ளார். ஆனால் 14ம் எதிர்மனுதாரர் மைனர் என்பதை மனுதாரர் மறைத்துள்ளார். 7ம் எதிர்மனுதாரரின் சகோதரி 1ம் எதிர்மனுதாரர் ஆவார். இறந்துபோன 7ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை உரிய நேரத்தில் சேர்க்கவில்லை. எனவே இம்மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 2முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

4) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

5) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

6) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர் தரப்பில் மனுதாரர்/வாதியால், 1 முதல் 10 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பாகப்பிரிவினை, தனி சுவாதீனம் மற்றும் விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி 1 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்து, வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், கடந்த 19.12.2022 ம் தேதியில் 7 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி இறந்துவிட்டார் என்றும், மேற்படி அவரது மூன்று மகன்களில் ஒரு மகன் ஏற்கனவே இறந்துவிட்டார் என்றும், மேலும் மற்றொரு மகனான சங்கர் அவரது மனைவி மற்றும் மகளை வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டார் என்றும், மேற்படி வாரிசுகளை சேர்க்க மனுதாக்கல் செய்ய காலதாமதமாகிவிட்டது என்றும், எனவே இறந்துபோன 7 ம் எதிர்மனுதாரரின் சட்டப்பூர்வமான வாரிசுகளை இவ்வழக்கில் 11 முதல் 15 பிரதிவாதிகளாக உரிய நேரத்தில் சேர்க்காததால், வழக்கு அற்றுப்போனதை ரத்து செய்ய மனுதாக்கல் செய்வதில் ஏற்பட்ட 409 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க கோரி மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாவா நிலுவையில் இருக்கும்போது 7 ம் பிரதிவாதி 19.12.2022 ம் தேதி இறந்துவிட்டதாக கூறுவது உண்மை என்றும், அவர்களுக்கு 3 மகன்கள் என்பதையும், அதில் ஒரு மகன் மேற்படி 7 ம் பிரதிவாதி இறப்பதற்கு முன்பே இறந்துவிட்டதாக கூறுவதை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், மேலும் இறப்புசான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், மேற்படி 3 மகன்களில் சங்கரன் என்ற மகன் 7 ம் பிரதிவாதி இறந்ததற்கு பின்பு இறந்தார் என்றும், மேற்படி சங்கரனின் பிள்ளைகள் மைனர்கள் என்றும், மேற்படி 7 ம் பிரதிவாதியின் வாரிசுகள் விபரம் தெரியவில்லை என கூறுவது பொய்யானது என்றும், ஏனெனில் மேற்படி வழக்கில் வாதி, மேற்படி வழக்குரையில் 7 ம் பிரதிவாதியை தனது தந்தையுடன் பிறந்த அத்தை என்றும், அதனால் காலதாமதம் என்றும் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் பொய் என்றும், அதனால் மேற்படி 7 ம் பிரதிவாதி இறந்த அன்றே

மனுதாரருக்கு நன்கு தெரியும் என்றும், மேற்படி 14ம் எதிர்மனுதாரர் மைனர் என்பதை மறைத்து தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், மேற்படி மனுவில் எந்தவிதமான உண்மையும் இல்லை என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(iii) 2 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் கடந்த 19.12.2022ம் தேதியில் 7ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி இறந்ததாக கூறுவது உண்மை என்றும், ஆனால் மேற்படி 7ம் எதிர்மனுதாரர் மூன்று ஆண்வாரிசுகளை விட்டுவிட்டு இறந்ததாக கூறுவது பொய்யானது என்றும், மேலும் மேற்படி மூன்று வாரிசுகளில் சங்கர் என்பவர் 7ம் எதிர்மனுதாரருக்கு முன்பே தனது மனைவி மற்றும் குழந்தைகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டதாக கூறுவது பொய்யானது என்றும், உண்மையில் இறந்த 7ம் எதிர்மனுதாரருக்கு சங்கரன், கார்த்திகேயன், மணிகண்டன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றும், அவர்களில் மேற்படி சங்கரன் என்பவர் தனது மனைவி நீலாம்பிகை, மகன் செந்தமிழ்செல்வன், இளவர் மகள் மகஷிரி ஆகியோரை விட்டுவிட்டு இறந்துள்ளார் என்றும், ஆனால் 14ம் எதிர்மனுதாரர் மைனர் என்பதை மனுதாரர் மறைத்துள்ளார் என்றும், 7ம் எதிர்மனுதாரரின் சகோதரி 1ம் எதிர்மனுதாரர் என்றும், இறந்துபோன 7ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை உரிய நேரத்தில் சேர்க்கவில்லை என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(iv) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் மனுதாரர்/வாதியால், 1 முதல் 10 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பாகப்பிரிவினை, தனி சுவாதீனம் மற்றும் விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. இவ்வழக்கு நிலுவையில் இருக்கும்போது 7ம் பிரதிவாதி உத்தேசதரப்பினர்களை தன் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் மேற்படி இறந்த 7ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்கள் பற்றிய விபரங்கள் தெரியாததால் மேற்படி வாரிசுதாரர்களை இவ்வழக்கில் உரிய நேரத்தில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(v) எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி உத்தேசதரப்பினர்கள் தான் இறந்த 7ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்கள் என்பதை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், மேலும் 14ம் எதிர்மனுதாரர்/உத்தேசதரப்பினர் இளவராக உள்ள நிலையில், அவரை நேரடியாக இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளது தவறானது என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது. மேற்கண்ட எதிர்வாதத்தை கருத்தில் கொள்கையில், உத்தேச தரப்பினர்கள் இறந்த 7ம் பிரதிவாதியின் வாரிசுகள் இல்லை என எதிர்மனுதாரர்கள் யாரும் குறிப்பாக மறுக்கவில்லை என்பது தெரியவருகிறது. மேலும் 14ம் எதிர்மனுதாரர் இளவர் என கூறும் நிலையில், அதை நிரூபிக்க எவ்வித வயது தொடர்புடைய ஆவணங்களையும் எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்யவில்லை என தெரியவருகிறது. மேலும் 14ம் எதிர்மனுதாரர் இளவர் என சொல்லும் நிலையில், அவரது பிறந்த தேதியை கூட எதிர்மனுதாரர்கள் குறிப்பிடவில்லை என்பதையும் இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

(vi) அவ்வாறு உள்ள நிலையில், 14ம் எதிர்மனுதாரர் இளவரா? என்பது குறித்து அசல் வழக்கின் நடவடிக்கையில்தான் பரிசீலிக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. ஒருவேளை அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள் கூறுவதுபோல் 14ம் எதிர்மனுதாரர் இளவர் என்பதற்கான ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டால், அவருக்கு காப்பாளர் நியமிக்க எதிர்மனுதாரர்கள் நடவடிக்கை எடுக்க எவ்வித தடையும் இல்லை என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. மேலும் இவ்வழக்கானது பாகப்பிரிவினை வழக்கு என்பதால், உத்தேச தரப்பினர்களை இவ்வழக்கில் 11 முதல் 15 வரையிலான பிரதிவாதிகளாக சேர்த்து விசாரணை மேற்கொண்டால் தான் இவ்வழக்கில் அனைவரது பாக உரிமையும் தீர்மானித்து, ஒரு முழுமையான மற்றும் இறுதியான தீர்வு காண இயலும் என்பதாலும், இவ்வழக்கினை தகுதிப்பாட்டின் அடிப்படையில் தீர்மானிப்பது இருதரப்பினருக்கும் உகந்தது என்பதாலும், நீதியின் நலன் கருதி மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு வழங்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

(vii) மேலும், காலவரையறைச்சட்டம் பிரிவு 5–ன் கீழான மனுவை பரிசீலனை செய்யும் பொழுது கடுமையாக அணுகாமல் இலகுவாக அணுகலாம் என பல்வேறு

முன்தீர்ப்புகளில் மாண்புமிகு உச்சநீதிமன்றமும், உயர்நீதிமன்றமும் தீர்மானித்துள்ளதால் எதிர்மனுதாரர்களின் கட்சி ஏற்புடையதல்ல என முடிவு செய்து இம்மனு அனுமதிக்கதக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும் மனுதாரர் இறந்த 7ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களின் விவரம் தங்களுக்கு தெரியாததால் தான் மேற்படி 409 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டதாக மனுதாரர் முன் வைத்துள்ள காரணம் ஏற்புடையது என இந்நீதிமன்றம் கருதுகிறது. இருப்பினும் வழக்கு நடவடிக்கைகளில் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட காலதாமதத்தை ஈடு செய்யும் வகையில் மனுதாரர், 1ம் எதிர்மனுதாரருக்கு ரூ.500/−யும், 2 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு ரூ.500/−யும் எதிர்வரும் 20.02.2025ம் தேதிக்குள் செலவுத்தொகையாக செலுத்தும் பட்சத்தில் இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக, மனுதாரர், 1ம் எதிர்மனுதாரருக்கு ரூ.500/−யும், 2 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு ரூ.500/−யும் எதிர்வரும் 20.02.2025ம் தேதிக்குள் செலவுத்தொகையாக செலுத்தும் பட்சத்தில் இம்மனுவை அனுமதிக்கலாம் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க 20.02.2025.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2025.02.13 10:45:22 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:− இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:− இல்லை</u>

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2025.02.13 10:45:27 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.